**<u>1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி</u>**
**<u>O.S.No. 107 /2018</u>**

27.07.2026 பி.வா.சா.2 திரு.சக்திவேல்

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. வாதி மற்றும் பிரதிவாதிகள் சம்மந்தப்பட்ட ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். வாதி சொத்து சம்மந்தமாக எந்த ஆவணங்களை பார்த்துள்ளேன் என்றால் எந்த ஆவணங்களையும் பார்க்கவில்லை. கந்தசாமி வகையறாவுக்கு பாத்தியப்பட்ட எந்த ஆவணங்களையும் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. வாதியின் சொத்திற்கு கிழமேல் மற்றும் தென்வடல் அளவு தெரியுமா என்றால் தெரியாது.
2. வாதி மற்றும் பிரதிவாதி சொத்திற்கு வடக்கே கிழமேல் தெரு உள்ளது என்றால் சரிதான். கிழமேல் தெருவிற்கு தென்பக்கமாக கீழ்பாகத்தில் வாதியின் வீடு உள்ளது என்றால் சரிதான். மேற்படி வீட்டிற்கு தென்பக்கமாக வாதிக்கு பாத்தியப்பட்ட மற்றொரு வீடு உள்ளது என்றால் சரிதான். வாதி தெருவுக்கு தென்பக்கமாக உள்ள வாதி வீட்டின் மேற்கு சுவர் அவருக்கு பாத்தியப்பட்ட சொந்த சுவரா என்றால் சொந்த சுவர் தான். வாதி வீட்டின் மேற்கு சுவரின் மேற்கு முகப்பை வாதி தான் வெள்ளையடித்து பேணி பராமரித்து வருகிறார் என்றால் வெள்ளை மட்டும் அடிப்பதற்காக அந்த பகுதியில் வருவார். எனக்கு தெரிய வாதி எவ்வளவு காலமாக மேற்கு பக்க முகப்பை வெள்ளையடிக்க வருகிறார் என்றால் எனக்கு தெரிய சுமார் 15 ஆண்டுகளாக வெள்ளையடிக்கிறார்.
3. வாதி வீட்டின் மேற்கு சுவருக்கு மேற்கேயும், பிரதிவாதிகள் வீட்டின்

கிழக்கு சுவருக்கே கிழக்யேயும் ஒரு பாதை உள்ளது என்றால் சரிதான். 15 வருடங்களாக வாதி மேற்படி பாதையின் வழியாக தான் வெள்யைடிக்கிறார் என்றால் சரியல்ல. தெரு வழியாக வந்து வெள்ளையடிப்பார். நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சொத்து விபரங்கள் பிரதிவாதிகள் வகையறா எனக்கு சாட்சி சொல்ல வரும்போது சொல்லித்தான் தெரியும் என்றால் சரியல்ல.

4. பிரதிவாதிகள் சொத்தின் கிழக்கு அத்தில் எல்கை கல் உள்ளதா என்றால் இல்லை. வாதி மற்றும் பிரதிவாதிகள் சொத்தை பிரிப்பதற்கு குறுக்கு சுவர் ஏதுவும் இல்லை என்றால் சரிதான். வாதி மற்றும் பிரதிவாதிகள் வீட்டிற்கு இடையில் உள்ள பாதை சம்மந்தமாக தான் பிரச்சினை உள்ளது என்றால் சரிதான். தெருவிற்கு தென்பக்கம் இருக்கும் வாதி வீட்டிற்கு தென்பக்கம் இருக்கும் வாதியின் மற்றோரு வீட்டிற்கு மேற்குபக்கம் யாருக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றால் எனக்கு தெரியாது. எனக்கு தெரிய தெருவிற்கு தென்பக்கம் இருக்கும் வாதியின் வீட்டிற்கு மேற்கு பக்கம் உள்ள பாதை சம்மந்தமாக தான் அவர்களுக்குள் பிரச்சினை செய்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

5. 1986 முதல் 1993 வரை 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட வீட்டில் குடியிருந்து வந்தேன் என்பதை காட்ட ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். எனக்கு சொந்த வீடு உள்ளது. தாவா ஊரில் வடபக்கம் உள்ளது. எனது சொந்த வீட்டில் எவ்வளவு காலம் குடியிருந்து வருகிறேன் என்றால் சுமார் 10, 15 வருடம் இருந்தோம். பின்னர் ஊர்கலவரத்தில் வெளியேறிவிட்டோம். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள வீட்டில் எவ்வளவு காலமாக வசிக்கிறேன் என்றால் 8 ஆண்டுகள்.

6. வாதி மற்றும் பிரதிவாதிகள் வீட்டின் இயற்கை அமைப்புகள் தெரியும் என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் தாவா பாதையானது பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி எனது தந்தையின் உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். எனக்கும் பிரதிவாதிகளுக்கும் இருக்கும் நெருங்கிய உறவின் அடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டது.

MARIMUTHU R MUNIYASAMY

Deposition Uploaded on 27.07.2026
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.07.27 17:08:39 +0530

**1 வது கூடுதல் மாவட்ட**
**உரிமையியல் நீதிபதி**
**திருநெல்வேலி**